ரிஜிஸ்டர்டு நெ. M. 886

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 4. பிப்ரவரி, 1942 நெ. 11.

எடிடர்:

ஸ்ரீமான்

வி. வியன்னா, பி.எ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்
டெலிபோன் நெ. 86166.



கிராம பஞ்சாயத்து போர்டின்
கடமை.

---

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்—

*புது உலக ஏற்பாடு திட்டம்—கிராம பஞ்சாயத்து* ... 171

2. எல்லாம் கொசு மயம் ... ... ... 173

3. உங்கள் கால் நடைகளுக்கு நன்றாக ஆகாரம் கொடுங்கள்... 177

4. நெல் பயிர் எருவும் பயிர் செய்யும் முறையும் பற்றிய சிறிய குறிப்பு ... 180

5. சென்னை மாகாணத்தின் ஆகார பயிர்கள் உற்பத்தியில் ஏற்றம் ... ... ... ... 184

6. புகையிலை பயிருக்கு ஆபத்து ... ... ... 186

# The Village Panchayat Journal.

VOL. IV] FEBRUARY. 1942. [No. 11.


## விண்ணப்பம்

1941-42ம் வருஷத்தின் சந்தாவை அனுப்பாதிருக்கும் பஞ்சாயத்துகளுக்கு மார்ச் மாதத்தில் வி. பி. கள் அனுப்பப் படும். தயவுசெய்து வாங்கிக்கொள்ள வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

வி. விய்யன்று,
காரியதரிசி.

every village doing its best in this direction may not only solve the problem of the needed supply but also release transport facilities for the emergent purposes of defence. With the disappearance of the steam engine as the primary producer of energy and the development of Electricity in its place industrial decentralisation has made rapid progress in the world. Though India may not claim to have come anywhere near industrialisation the stage has been set, till better times dawn, for village industries to make such small things as have become part of our daily necessities, like paper for instance,

by contact with the wider world. During the period of war machinery for peace production may not be thought of, nor, importation. Therefore whatever ultimate opinions men have, for the present, village industries must hold the field and pooling of local capital for the purpose must be encouraged. This agricultural and economic programme of a fairly self-sufficient existence for the time being is impossible to be achieved until local autonomy exists for the people to adjust their own affairs without waiting for advice and guidance on outside authorities whose attention must necessarily be given to the war and its successful termination. If therefore, high-placed men like H. E. the Governor of Bombay should have their dream realised of far reaching adjustments in the agricultural and village economy, it is essential that, even in the midst of this war, every provincial Government should invest villages with full power to manage their own affairs including dispensation of justice in petty matters and policing of villages.

It is heartening at this juncture to learn that in Punjab the the Panchayat movement is being pushed with vigor. Major Khizar Hayat Khan Tiwana, Minister for Public Works, in addressing the Panchayat field staff, recently, expected to have at the end of three years well over 18,000 Panchayats, or in other words, to cover no less than 50 per cent. of the villages of the Province by Panchayats. He warned certain reluctant Executive officers who failed to see the revival of Panchayats in its true perspective that the Government could not but view with disfavor any reluctance in carrying out the duties entrusted to such officers. He announced, what we have long agitated for in this province, that his Government had decided to appoint village guides in one Tahsil in each district of the province to carry on extensive programme of enlightening the zamindars (in our language, ryots) on economic and social problems facing them to-day. He dealt with the British judicial system and condemned it outright as the cause of the disintegration of our villages. The aim that Major Hayat Khan set before himself was the aim of autonomy. He said that the village organism and its spirit must be rehabilitated and the whole village community brought to life again.

We wish Major Hayat Khan all success. We wish also that the spirit that animates him and the Governor of Bombay equally animated rulers of other Provinces and led to universal adoption of an autonomous village India as the shield against destruction of lifes' ties in the devastating times through which the world is passing. We also feel that if this may even partially be achieved, it will point the way to the future world order with a true all round democratic basis-political, economic, and social.

---

# சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் பொதுக்கூட்டம்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் பொதுக்கூட்டம் 1942-ம் வருஷம் மார்ச்சு மீ 29 தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12-மணிக்கு நடைபெறும். எல்லா மெம்பர்களும் வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## பஞ்சாயத்து மசோதா.

கவர்ன்மெண்டார் இந்த மசோதாவைக் குறித்து ஆலோசனை கூற ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அந்த கமிட்டி சீக்கிரம் கூடும். அந்த சமயத்தில் நம் பஞ்சாயத்து ஜெனரல்பாடியும் கூடி, தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவித்தால் நல்லது.

ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு பிரதிநிதியை ஜெனரல் பாடி கூட்டத்திற்கு அனுப்பவேண்டியது—அதனால் யூனியன் பிரதிநிதிகளின் கையை வலுப்படுத்த உதவியாகயிருக்கும். யுக்த பீஸ் காரணம் வைத்து பிரதிநிதிகளை அனுப்பத் தவறவேண்டாம்.

## விஷயங்கள்.

1. 31-3-42-ல் முடியும் 4 ஆண்டில் யூனியன் வேலையைப் பற்றிக் காரியதரிசிகளின் அறிக்கை.
2. சர்க்காரின் புதிய பஞ்சாயத்து மசோதாவைப்பற்றி யோசித்தல்.
3. அமைப்புத்திட்டத் திருத்தப் பிரேரணைகள். (அடுத்த பக்கத்தில் காண்க.)
4. உத்தியோகஸ்தர்கள் தேர்தல்.
   (a) நிர்வாக சபை.
   (b) தலைவர், உபதலைவர், பொதுக்காரியதரிசி, உதவிக்காரியதரிசிகள்.
5. பொதுக்காரியதரிசி பிரஸ்தாபிக்கும் இதர விஷயங்களும், மெம்பர்கள் முன் அறிவிப்புடன் கொண்டுவரும் பிரேரணைகளும்.

---

குறிப்பு:—இக்கான்பரன்சுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதில் ஏற்படும் செலவுகளைச் சர்க்கார் அனுமதிக்கவில்லை; எனினும் இதைப் பொருட்படுத்தாமல் சகல அங்கத்தினரும் கூட்டத்தில் ஆஜராயிருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்; மனமுண்டானால் இடமுண்டு; எப்படியாவது செலவைச் சரிக்கட்டிக் கொள்ளலாம். எல்லாப் பஞ்சாயத்துகளும் பிரதிநிதிகளை அனுப்பி யூனியனைப் பலப்படுத்துவது நிரம்பவும் அவசியம்; மற்றப்படி நமது அபிப்பிராயங்களைச் சர்க்கார் சட்டை பண்ணமாட்டார்கள். புதிய பஞ்சாயத்து மசோதாவில் அநேக அதி முக்கியமான மாறுதல்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளைப்பற்றி ஆலோசித்து நமது ஏகோபித்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவது அத்தியாவசியமல்லவா?

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 4 | பிப்ரவரி, 1942. | No. 11

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப்பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### புது உலக ஏற்பாடு திட்டம்—கிராம பஞ்சாயத்து.

பம்பாய் மாகாணத்து மே. த. கவர்னர் சீர்திருத்தப்பட்ட கிராம அபிவிருத்தி போர்டை ஆரம்பித்து வைக்கையில் இனி ஏற்படப் போகும் நமது கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட சுயாட்சி ஸ்தாபனங்களைக் குறித்து ஒரு முக்கியமான பிரசங்கம் செய்தார். மிகவும் விருத்தியடைந்திருக்கும் மற்ற நாடுகளை விட இந்தியாவின் கிராமங்கள் அநேக மிக சங்கடமான நிலைமைகளை அநேக வருஷங்கள் சமாளித்திருக்கின்றனவென்றும், இன்னும் நெருக்கடி ஏற்பட்டால் அதையும் சமாளிக்க சித்தமாக யிருக்கின்றனவென்றும் சொன்னார். மேலும், இந்த சண்டை நீடித்து நடக்கும் என்றும், கிராம விவசாய பொருளாதார முறைகளை தீர்க்க திருஷ்டியுடன் திருத்தியமைக்க அவசியம் ஏற்படும் என்றும் சொன்னார். இதைக் குறித்து அவர் செய்த பிரசங்கத்தின் பகுதிகள் அப்படியே நம்முன் இல்லை. ஆயினும் அவர் பொது கிராம வாழ்க்கையையும், சர்வ ஸ்வதந்திரமுள்ள அடிப்படையான கிராம ஆட்சியைக் குறித்தும் மனதில் வைத்துக் கொண்டுதான் பேசினார் என்பது நிச்சயம். அப்படிப்பட்ட ஆட்சிக்கு வெளி உதவி தேவையில்லை. கிராம சமூகம், வெளியுலகில் பரவியிருக்கும் புயல் காற்றினால் கொஞ்சமும் பாதிக்கப்படாமல், தன் தேவைகளையும், ஆகாரத்தையும், துணிகளையும், மற்ற விவகாரங்களையும், தானே வசித்துக் கொள்ளும் காலம் மிகவும் மாறி விட்டது, மற்ற இடங்

களில் ஏற்படும் மாறுதல்கள் நம் கிராம வாழ்க்கையை பாதிக்காமல் போகாது. ஆனாலும் நமது கிராமங்களின் பிரத்தியேகமான பொருளாதார முறைகளையும், எளிய வாழ்க்கையையும், சுதந்திரத்தையும், மறுபடி வளர்வதை பாதிக்க முடியாது. பொதுவாக கிராம தேவைக்கான, உணவு, வஸ்திரம், இவைகளை பூர்த்தி செய்துகொள்ள ஒரு ஆர்வம் இருந்து வருகிறது. செய்யவேண்டியது என்னவென்றால், இந்த உற்சாகத்தை வலுப்படுத்தி விருத்தி செய்யவேண்டும். அப்படியானால், தேவை ஏற்படும் சமயத்தில், ஒவ்வொரு கிராமமும் தன் தேவைகளை தாமே கவனித்துக் கொண்டு, தேச பாதுகாப்புக்கு அவசியமான வண்டி போக்கு வரத்துகளை மிக அவசரமான பாதுகாப்புக்காக அனுப்பிவிட செய்யலாம். ஆவி இன்ஜின் போய், மின்சார விசை ஏற்பட்டிருக்கும் இந்த காலத்தில் உலகத்தில் தொழில் அபிவிருத்தி துரிதமாக பரவிக் கொண்டு வருகிறது. தொழில் அபிவிருத்தி இந்தியாவில் மற்ற தேசங்களைப் போல் அவ்வளவு ஏற்படா விட்டாலும், நித்தியப்படி வாழ்க்கைக்கு தேவையான அநேக சில்லரை வஸ்துக்களை சுபிக்ஷமான காலம் வரும் வரையில் ஒவ்வொரு கிராமத்திலும் செய்துக்கொள்ள, மற்ற தேசங்களுடன் ஏற்பட்ட தொடர்பால், இப்போது சௌகர்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு ஒரு உதாரணம் காகிதம் செய்வது. சண்டை நடக்கும் போது, சமாதான காலங்களில் செய்யும் சாமான்களைப் பற்றியும், இயந்திரங்களைப்பற்றியும் கிளைக்க முடியாது. வெளியிடங்களிலிருந்து தருவிக்கவும் முடியாது.

ஆகையால் மனிதர்களின் தீர்மானமான அபிப்பிராயங்கள் எதுவாயிருந்தாலும் சரி, தற்சமயம் கிராமத்தொழில் அபிவிருத்திதான் எடுத்தது. அதற்குத் தேவையான மூலதனத்தை கிராமங்களில் சேகரிக்க தூண்டப் படவேண்டும். இதற்கு, ஒவ்வொரு கிராமமும் தன் பொருப்புகளையும் பொருளாதார விஷயங்களையும் தாமே கவனித்துக்கொள்ள சுதந்திரம் இருக்கவேண்டும். முக்கியமான யுத்த ஏற்பாடுகளைக் கவனிக்கும் வெளி இலாகாக்களை அடிக்கடி தம் கிராம விஷயமாக ஆலோசனைகள் கேழ்கவும், அனுமதி கேழ்கவும் படியான நிலமை இருக்கக் கூடாது. அப்போதுதான் ஒவ்வொரு கிராமமும் தனக்கு தேவையான எல்லா வற்றையும் உற்பத்தி செய்துக்கொள்ள அனுகூலமாக இருக்கும். ஆகையால் பம்பாய் கவர்னர் போல் உன்னத ஸ்திதியில் இருக்கும் மனிதர்களின் கனவு பூர்த்தியாக வேண்டுமானால் அதாவது கிராம விவசாய, பொருளாதார விஷயங்களில் அதிக சீர்திருத்தம் ஏற்படவேண்டுமானால்—ஒவ்வொரு மாகாண கவர்மெண்டும் கிராமங்களுக்கு பூரண சுதந்திரம் கொடுத்து, அவைகளின் ஆட்சியை, சில்லரை விவகாரங்களில் நியாயம் வழங்குவது, கிராமங்களை காப்பது உள்பட, அவைகளிடமே ஒப்படைக்க வேண்டியது மிக அவசியம். யுத்தம் நடந்தாலும், இதைச் செய்யவேண்டும்.

பஞ்சாப் மாகாணத்தில் பஞ்சாயத்து இயக்கம் உத்சாகத்துடன் நடப்பது ரொம்பவும் திருப்தியளிக்கும் விஷயம். சமீபத்தில் பஞ்சாயத்துகளின்

சிப்பந்திகள் கூட்டத்தில், மந்திரி மேஜர் கிசார் ஹயத் கான்டி வாணு என்பவர் பஞ்சாபில் இன்னும் மூன்று வருஷத்தில் 18,000 பஞ்சாயத்துகளை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பதாகச் சொன்னார். அதாவது, மாகாணத்திலுள்ள மொத்த கிராமங்களில் 50 சத விகிதத்திற்கு குறையாமல் பஞ்சாயத்துகள் வேலை செய்யும். பஞ்சாயத்துகளின் புனருத்தாரணத்தில் முழு நம்பிக்கையில்லாமலிருக்கும் சில நிர்வாக உத்தியோகஸ்தர்களை, தங்களுக்கு அளிக்கப்பட்ட வேலைகளை சரிவர செய்ய தயங்கினால் கவர்மெண்டாரின் நிந்தைக்கு உட்படுவார்கள் என்று எச்சரிக்கை செய்தார். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு தாசிலில் கிராம ஊழியர்களை நியமிக்க நிச்சயித்திருப்பதாயும், அவர்கள் மூலமாய் ஜமீன்தார்களுக்கு தற்சமயம் அறியவேண்டிய பொருளாதார, சமூக விஷயங்களைப் பற்றி போதிக்க தீவிரமான ஏற்பாடு கவர்மெண்டார் செய்யப் போவதாயும் தெரிவித்தார். நாமும் நம்மாகாணத்தில் இந்த மாதிரி ஏற்பாட்டுக்குத்தான் வெகு காலமாக கிளர்ச்சிசெய்துக் கொண்டிருக்கிறோம். அவர் ஆங்கில நியாய ஸ்தல ஏற்பாடு முறையை குறித்து, நம் கிராமங்களின் வாழ்க்கை க்ஷீணித்ததற்கு அது தான் காரணம் என்று பலமாக கண்டித்தார். மேஜர் ஹயாத் கான் அவர்களின் நோக்கம் சுயேச்சை கொடுப்பது தான். கிராம உயிர் நாடியை எழுப்பி, புத்துயிர் அளித்து, சமூக ஜீவனை வாழும்படி செய்யவேண்டும் என்று அவர் சொன்னார்.

மேஜர் ஹயாத் கானுக்கு எல்லா வெற்றியும் ஏற்படவேண்டும் என்று கோருகிறோம். அவருக்கும், பம்பாய் கவர்னருக்கும் இருக்கும் உத்சாகம் மற்ற மாகாணங்களை ஆளும் கவர்மெண்டாருக்கும் இருக்கவேண்டி கோருகிறோம். இதனால் இந்தியா பூராவும் சுதந்திர கிராம ஆட்சி ஏற்படுத்தப்பட்டு, தற்சமயம் உலகத்தில் நடக்கும் கொடூரமான உயிர் சேதங்கள், மற்ற சம்பவங்கள் நேரிடாமல் தடுப்பதற்கு ஒரு கவசமாக இருக்கும். இம்முயற்சி சிறிதளவேனும் பலனளித்தாலும், இனி ஏற்படப்போகும் புதிய உலக திட்டத்திற்கு-அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கைகளில் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஏற்பாட்டிற்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்பது எங்கள் துணிபு.

# எல்லாம் கொசு மயம்.

முன் காலங்களிலெல்லாம் வயது முதிர்ந்தவர்களும் மற்றவர்களும், வேலையற்றிருக்கும் போதும் தூக்கம் வராமலிருக்கும் போதும் அடிக்கடி ராம ஸ்மரணை செய்து 'எல்லாம் விஷ்ணு மயம் ஜகத்' என்று சொல்லுவது வழக்கம். அதெல்லாம் நாஸ்திகம் பரவிவரும் இந்த காலங்களில் மலையேறி விட்டது. இப்போதெல்லாம் ராமனுமில்லை, 'பீமனுமில்லை', தரித்திரம் இப்போது இந்த நாட்டில் தாண்டவமாடுகிறது. குடிக்க கஞ்சியும் உடுக்க வஸ்திரமும் கிடைப்பது பஞ்சமாகயிருக்கிறது. உடம்பை மூடிக்கொள்ள துணி கூட இல்லாமல் இப்போதெல்லாம்

கோடிக் கணக்கான ஏழை மக்கள் 'விஷ்ணு மயம் ஜகத்'திற்குப் பதிலாக 'எல்லாம் கொசு மயம் ஜகத்' என்று கொசுகடியினால் கதறுகிறார்கள். பக்தி, மற்றது எல்லாம் வயிறு நிரம்பியவனுக்குத்தான் அல்லவா! இரவில் தூக்கம் கிடைப்பதில்லை. கொசு மஹாராஜன் தான் ஸர்வ வியாபியாய் எல்லா வீடுகளிலும் பரவி ராஜ்ய பாரம் செய்கிறார். தூங்க அனுமதிப்பாரா. ஜனங்கள் படும் அவதி சொல்லத் தரமன்று. அவைகளின் சங்கீதம் இரவெல்லாம் காதுகளைத் துளைக்கின்றன. கடியினால் தேகமெல்லாம் சொரிந்து ரத்தம் வெளிக்கிளம்புகிறது. ஒரு மயிர் துவாரம் கூட கடிபடாமல் தப்ப முடிவதில்லை. கொட்டாவி விட்டாலோ, 'கோவிந்தா,' கோடிக் கணக்கான பரிவாரங்கள் ஹாய்யாக வாய்க்குள்ளே புகுந்து விடுகின்றன.

ஆதியில் ஸ்வல்பமாக, மெல்லியதாக உற்பத்தியான இந்த ஆசாமி இப்போது செழிப்பாக விருத்தியாகி, பிரும்மாண்டம் பூராவும் பரவி, ஆனந்தமாக எல்லா மனிதர்களின் தேக ரத்தத்தை குடித்து தன் கொட்டத்தை அடக்க ஒருவருமின்றி ஸ்வேச்சாதிகாரம் செலுத்துகிறது. ஆனைப்பட்ட ஹிட்லர் ராக்ஷசன் கூட இதனிடம் வாலாட்ட முடியாது.

ஆமாம். இதற்கு இவ்வளவு செருக்கு எப்படி வந்தது. யார் காரணம்? உலகத்திலுள்ள எல்லாம் தான் காரணம். நீங்கள், நான், இஞ்சினீயர்கள், கன்ட்ராக்டர்கள், ரயில் வண்டிகள், அரசாங்கம், ஜில்லா போர்டு இன்னும் கணக்கற்றவர்கள் தான் காரணம்.

ஜனங்கள் வாடகைக்காக ஆசை பிடித்து செடி கொடிகள் சரியாக வைத்து, அவைகளுக்கு வீட்டு ஜலம் பாய்வது சரியாக கூட அமைக்காமல் ஒரு அங்குல இடத்தைக் கூட விடாமல் கட்டடம் கட்டி விடுகிறார்கள். மேலும், ஒரு பள்ளம் தோண்டி, தண்ணீர் தேங்கவும் துர்நாற்ற மடிக்கவும் செய்கிறார்கள். நம் கிராம ஊருகளை கவனிப்போம். சிறிதும் ஜலம் வெளியே அடித்துக்கொண்டு போக சரியான வசதி யில்லாமல் அங்கங்கே தேங்கி பள்ளங்களில் சேருகிறது. அப்படி கொஞ்ச தூரம் போனாலும், தெருக்களின் நடுவில் தேக்கமாக நின்று விடுகிறது. அதோடு கூட நாம் நம் வீட்டுச் சுவரை கூட இடிக்கும்படி உழுது பயிர் செய்து விடுகிறோம்.

நம் வீடு கட்டும் முறை தண்ணீரை நன்றாக அடித்துக் கொண்டுபோகும் படியான சாய்வை அனுசரிப்பதில்லை. சில இடங்களில் போகும் தண்ணீர் திரும்பி வீட்டுப் பக்கமே அடித்துக் கொண்டுவர ஆரம்பித்து விடுகிறது.

தண்ணீர் அடித்துப் போக நூற்றாண்டுகளாக வழங்கி வந்த நம் கட்டட முறைகளை நம்முடைய இஞ்சினீயர்கள் கவனிப்பதில்லை. ஜலமானது தன் விசைக்கு எதிர் திக்கில் போகவேண்டி யிருக்கிறது. நம் பட்டணமே இதற்கு ஒரு உதாரணம். நம் நிலம் கோதாவரி நதி பக்கம் சாய்வாய் உள்ளது. நூற்றாண்டுகளாக பட்டணத்து தண்ணீரும், மற்ற எல்லா தண்ணீரும் கோதாவரி நதியில் தான் போய் விழும். ஒரேயடியாக நம் இஞ்சினீயர்கள் எல்லா வாய்க்கால்களையும் அடைத்து, நதிக்கு கரையும் கட்டி விட்டார்கள். சாக்கடைத் தண்ணீர் போக வழி ஏற்படுத்தவில்லை, மழை காலத்தில் நம்ப இன்னிஸ்பேட்டையைப் பார்த்தால், தங்கியிருக்கும் தண்ணீர் வெளியே போக வழி காணாமல் அங்குமிங்கும் ஊசலாடிக்கொண்டிருக்கும். இது தான் இஞ்சினீயர்களின் புத்திசாலித் தனத்தினால் ஏற்பட்ட லாபம்.

முன் காலங்களில், வெள்ளம் வந்தால் ஆற்றுக் கால்கள் ஊர்களுக்குள் எல்லா குண்டு குழிகளை நன்றாக பரவி சுத்தம் செய்து விடும். கொசு உற்பத்தியாக சந்தர்ப்பமே கிடையாது.

ரயில் பாதைக்காக மேடு போடுவது, அப்போது அக்கம் பக்கத்தில் பள்ளம் தோண்டி அதற்காக மண் எடுப்பது, அவைகளில் கொசுக்களை வளரவிடுவது மிகவும் சகஜமான காக்ஷி. சில சமயம் இது பட்டணங்களுக்கே ஆபத்து.

இந்த ரயில் கம்பெனி வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமானதால் அவர்களை தைரியமாக கேழ்ப்பவர்கள் இல்லை. வங்காளத்தில் இந்த மாதிரி இடங்களில் கொசுக்களின் உபத்திரவத்தை சொல்லி முடியாது.

சாக்கடை ஜலம் போகவழிஏற்படுத்தாமல், குழாய்களை வைப்பது குடியிருக்கும் ஜனங்களின் உயிருக்கே ஆபத்து. இது விஷயமாக ஆக்ஷேபித்தால் ஒருவரும் காதில் போட்டுக் கொள்ளுவதில்லை. அறை குறை சுகாதார இஞ்சினீயர்கள்தான் இந்த விஷயங்களில் ஏக சக்ரவர்த்தி. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கோ, பட்டணங்களில் மாளிகைகளில் உல்லாசமாக வாழ்ந்து வருவதால், இந்த சங்கடம் தெரிவதில்லை.

இது மாத்திரமல்ல. அசுத்தமான தண்ணீர் தேக்கங்களிலிருந்தும் வாய்க் கால்களிலிருந்தும், பெரியதாயினும், சிறியதாயினும் சரி, கொசுக்கள் கிளம்பி விருத்தியடைகின்றன. கவித்திறமை எனக்கு இருந்தால் இவைகளைக் குறித்து அசுத்த ஜல பூதங்கள் என்று பாடியிருப்பேன். எனக்கு அந்த சக்தி யில்லை. யாராவது திறமையுள்ள கவி 'கொசு விஜயத்தைப் பற்றியாவது, 'கொசு ஸ்தோத்திர மாலை' யாவது கவிபாடக் கூடாதா!

மித்த. இப்படி பல காரணங்களின் உதவியால் கொசு தன் ஆதிக்கத்தை சாம்ராஜ்யம் பூராகவும் செலுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் சிலர் நம்மை ஏசுவார்கள். 'சரிதான், வயிற்றுச் சோற்றுக்கும், உடுக்க துணிக்கும் தாளம் போடும் ஜனங்களுக்கு, ஹெல்த் ஆபீசர்கள் கொசுவைப்பற்றியும் ஈயைப் பற்றியும் படங்களுடன் பிரசாரம் செய்தால் எப்படி பலன் தரும்", என்று கேழ்கிறார்கள். 'பிரசாரம் செய்யும் முறைகளை அனுஷ்டிக்க வழி என்ன', ஜனங்கள் தரித்திரம் நீங்கும் வரைக்கும் இந்த வேலைகளெல்லாம் பலன் தருமா. எல்லாம் தண்டம்,' என்கிறார்கள். இதுவும் வாஸ்தவமே. ஆனால் விஷயங்களைத் தெரிந்து, என்ன செய்யவேண்டும் என்றும் தெரிந்துக் கொள்ளுவதும் நல்லது தான். ஆகையால் அதைப்பற்றி தெரிந்துக் கொள்ளுவோம். முடிந்த வரையில் அனுஷ்டிப்போம்.

பல வித அபாயங்களுக்கும், கஷ்ட நஷ்டங்களுக்கும் இந்த கொசுதான் காரணம். அதனால் கணக்கற்ற மனிதர்கள் மாண்டு போகிறார்கள். கணக்கற்றவர்கள் பலஹீனர்களாகிறார்கள். 'மலேரியா நோய் ஒரு வகை கொசுவின் கடியால் உண்டாகிறது. இந்த நோய் பிரதி வருஷம் லக்ஷக்கணக்கான (15, 20 லக்ஷம்) மக்களை கொள்ளை கொள்ளுகிறது.

மற்ற ஒரு தேசத்திலும் இவ்வளவு ஜனச்சேதம் இதனால் கிடையாது. அது மட்டுமல்ல. பத்து மடங்கு ஜனங்கள் இந்த வியாதியால் பீடிக்கப்பட்டு க்ஷீணமடைகிறார்கள். சம்பாதிக்கும் சக்தி குன்றி பல குடும்பங்கள் துன்பமடைகின்றன. நம் மக்களே வீர்யம் குன்றி, பலமற்றுப் போகிறார்கள். இந்த நோயால்

சம்பாத்தியம் மட்டும் குறைவதோடல்லாமல், அதை குணப்படுத்திக்கொள்ள பணம் செலவழிக்க நேரிடுகிறது. இது பெருத்த நஷ்டமாகையால், இதை ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும்.

கொசுக்கள் தேங்கும் தண்ணீரிலும் ஓடும் தண்ணீரிலும் உற்பத்தியாகின்றன. அவை அழுகிப்போன இலைகள், மரக்குச்சி, கிளைகள், காய்கறிகள், புல் முதலியவைகளை புசிக்கின்றன.

இவைகள் மூன்று வகை, அனோபிலிஸ், கியூலெக்ஸ், ஸ்டிகோமியா என்பன, முதல் சொன்னது மலேரியா என்ற வியாதி கிருமிகளைக்கொண்டது, இரண்டாவது, யானைக்கால், கீல் நோய்களை பரவச்செய்கிறது. கடைசிவகை விஷ ஜுரத்தை உண்டாக்குகிறது.

'அனோபிலிஸ்' என்பது ஆறுகளிலும் ஓடைகளிலுமுள்ள நல்ல ஜலத்தில் வசிக்கிறது, 'கியூலெக்ஸ்' என்பது தேக்கமான தண்ணீர் குட்டைகளிலும் துர்நாற்றமுள்ள கால்வாய்களிலும் இருக்கும். உருவத்தில் பெரிது. திமிங்கிலம் போல், சிறிய ஜந்துக்களை இது முழுங்கிவிடும். அனோபிலிஸ் கடித்தால் அவ்வளவு அபாயமில்லை. ஆனால் நோவு அதிகமாக யிருக்கும். ஈர பிரதேசங்களில்—முக்கியமாக ராமசந்திரபுரம்—அநேக ஜனங்கள் தேகம் முழுவதும் யானைக்கால், விரைவாதம் முதலிய வியாதிகளால் கஷ்டப்படுவது பார்க்க சகிக்காது. சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீர் தேக்கமிருக்கும்.

இதிலிருந்து மீள வழி என்ன? கவர்மெண்டாரும் ஸ்தல ஸ்தாபனங்களும் இது விஷயமாக உழைத்து யோசிக்காமல் போனால், ஒரு வழியும் ஏற்படாது. ஆனால் நாமும் நம்மையே சகாயம் செய்துகொள்ளும் வழியையும் அனுசரிக்க வேண்டும். அதனால் கிடைக்கும் பலனை அடைய பஞ்சாயத்துகள் மூலமாகவோ, ஐக்யப்பட்டோ முயற்சி செய்யவேண்டும்.

## மருந்து.

மலேரியாவுக்கு மருந்து கொய்னா. இது எல்லாவித நோய்களை தீர்க்காவிட்டாலும், அதனால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும், மொத்தத்தில் இதுதான் ஏற்ற மருந்து. நம் தேசத்தில் இது அதிகம் பயிர் செய்யப்படுவதில்லை. அது பற்றி முயற்சியும் இல்லை. மற்ற தேசங்களிலிருந்து இது தருவிக்கப்படுகிறது. பஞ்சாயத்துகள், முனிசிபாலிடிகள், மற்ற ஸ்தல ஸ்தாபனங்கள் இதை தாராளமாக தருவித்து, இலவசமாகவாவது அல்லது மலிவான விலைக்காவது எல்லா நோயாளிகளுக்கும் இதை விநியோகிக்க வேண்டும்.

## தடுக்கும் முறை.

கொசுக்களை உற்பத்தியாவதற்கு முன்பே தொலைத்துவிடவேண்டும். தண்ணீர் தேக்கங்கள் எல்லாவற்றையும் தூர்த்துவிடவேண்டும். தண்ணீர் ஓடி பாயும்படியான சாக்கடைகள் கட்டவேண்டும். சாக்கடை ஜலங்களை மூடி வைக்கவேண்டும். கொசு அண்டவிடக்கூடாது.

பத்திரமாக மூடி போடவேண்டும். உபயோகமற்ற கிணறுகளையெல்லாம் தூர்த்துவிடவேண்டும். புதிய கிணறுகளுக்கெல்லாம் மூடி போட்டு தண்ணீர் எடுக்க பம்புகள் வைக்கவேண்டும். தேக்கத் தண்ணீர்மேல் மண்ணெண்ணெயை அல்லது மருந்து எண்ணெய்கள் ஊற்றவேண்டும். சாக்கடைகளை தண்ணீரை அடித்துக்

தொட்டிகள் வைக்கவேண்டும். ஹௌஸ்களிலும், குளங்களிலும் கொசுக்களைத் தின்னும் மீன்களை வளர்க்கவேண்டும். காலி பானைகளை, பீப்பாய்களை கவிழ்த்து வைக்கவேண்டும். தண்ணீர் சேரவிடக்கூடாது. தண்ணீர் தேக்கமில்லாவிட்டால் கொசு முட்டை விடமுடியாது. 8 நாளாவது தண்ணீர் தேங்கினால்தான் கொசு விருத்தியாகும். ஆகையால் தண்ணீர் தங்கவிடாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

நாகரீகமடைந்த நாடுகளில் இந்த வேலைகள் ரொம்பவும் ஆச்சரியமாக நடந்திருக்கின்றன. முடிந்தால், மற்றொரு சமயம், சூயஸ், பனமா பிரதேசங்களில் நடந்திருக்கும் கடுமையான ஏற்பாட்டைப்பற்றி நான் விவரிக்கிறேன். பஞ்சாயத்துகள், முனிசிபாலிடிகள், மற்ற ஸ்தல ஸ்தாபனங்கள் எல்லாம் பொது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பொது ஜன ஆரோக்கியத்துக்கு வேண்டிய எல்லாவற்றையும் அவைகள் செய்யவேண்டும்.

ஐக்ய சங்கங்களும் கொஞ்ச வேலை செய்யலாம். பஞ்சாயத்துகளும், இதர ஸ்தாபனங்களும் தேர்தல்களுக்கு வேலை செய்வதிலேயே தங்கள் நாட்களை செலவழிக்கின்றன. அதனால் கக்ஷி பிரதி கக்ஷி ஏற்படுகிறது. தன்னலத்தையும் பாராமல், பிறருக்காக சேவை செய்வது தெய்வத்தன்மை வாய்ந்தது, என்று ஜனங்கள் அறியவேண்டும். ஜனங்களுக்கு உண்மையாக நன்மை செய்யட்டும். அவர்களுக்கு சௌகர்யங்கள் கிடைக்கும்படி செய்யட்டும். கிராமத்தில் இதைப் பற்றி பிரசாரம் செய்யட்டும். எல்லா கிராமங்களிலும், எல்லா ஜனங்களும்—வயதானவர்கள், இளைஞர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், கிராம பஞ்சாயத்துகள், உபாத்தியாயர்கள், பெண்கள், ஆண்கள் ஒன்று கூடி கிராமங்களுக்கு சேவை செய்து, இந்த விஷயங்களை குறித்து நன்றாக கவனிக்கவேண்டும், என்பது என்னுடைய மனப்பூர்வமான வேண்டுகோள்.

---

## உங்கள் கால் நடைகளுக்கு நன்றாக ஆகாரம் கொடுங்கள்.

இந்திய விவசாயத்திற்கு கால் நடைகள் ஜீவாதாரமானவை. உலகிலுள்ள மொத்த கால் நடைகளில், இந்தியாவில் இருப்பது சுமார் மூன்றிலொரு பங்கு. வண்டிகள் இழுக்கவும் கால் நடைகள் மிகவும் தேவை. விவசாயத்தின் வருமானத்தை இவைகள் ரொம்பவும் அதிகப்படுத்துகின்றன. அவைகளை நன்றாக பாதுகாக்க வேண்டியது மிக அவசியம். இப்போதுபோல் அவைகள் கவனிப்பற்று ஆகாரக் குறைவுடன் இருக்கக்கூடாது. வளர்ச்சி, கன்று போடுதல், பால் சுரப்பது, பொதுவாக வலிவு, புஷ்டி, இந்த விஷயங்களில் ரொம்பவும் விருத்தி ஏற்படும்படி செய்யவேண்டும்.

### ஆகாரம்.

கால் நடைக்கு சுறுசுறுப்பாய் வேலை செய்ய, இன்ஜினுக்கு ஆவிபோல், ஆகாரம் தேவை. தேக அவயவங்களின் உழைப்புக்கேற்ற தகுந்த ஆகாரம் கொடுக்க வேண்டும். அவைகளின் தேகத்தில் சுறுசுறுப்பு அதிகமாக்க அவைகளுக்கு கார்போஹைட்ரேட்ஸ்—அதாவது, சர்க்கரைகள், தித்திப்பு சாமான்கள்—சத்து ஆகாரங்களும், கொழுப்பு சத்து ஆகாரங்களும் கொடுக்கவேண்டும். இவைகள் வைக்கோல் முதலிய தீனிகளில் கிடைக்கின்றன. தேக உழைப்பினால் ஏற்படும் அவயவ

தேய்ப்புகளுக்கு புஷ்டி சத்தும், சதைகளையும், தசை நரம்புகளையும் வளரச் செய்யும் ஆகாரங்களையும் கொடுக்கவேண்டும். அவைகளாவன. புண்ணாக்கு, பருத்திக் கொட்டை, தான்யங்கள், தவுடு முதலியன. கால்நடைகளுக்குச் சரியான ஆகாரம் கொடுத்து, சரியாக காப்பாற்றினால் தான் அவைகளின் மூலம் லாபம் கிடைக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இது பால் கரக்கும் ஜீவன்களுக்கு மிகவும் முக்கியம். ஆனால் உழைக்கும் ஜந்துக்கள் குறைந்த ஆகாரத்திலும் வேலைசெய்து, கொஞ்சம் கொஞ்சமாக பலஹீனமடைந்து கடைசியில் முற்றிலும் சேதமடையும். ஆகையால் கால் நடைகளை சரிவர பாதுகாப்பாற்றாமலிருப்பது புத்திசாலித்தனமன்று. அவைகளை அசட்டை செய்வதால், குடியானவனும், அவனோடு தேசமும், நாசமடைவார்கள்.

## கால் நடை ஆகார விகிதம்.

ஆகையால் அவைகளின் ஆகார விகிதத்தைப்பற்றி அறிவது அவசியம். அவை அவைகளின் நோக்கத்திற்கேற்ப, இரண்டு வகைப்படும். முதல் நோக்கம் ஜந்துவை சாதாரண தேக சௌக்கியத்திலும் ஆரோக்கியத்திலும் வைப்பது. அதுதான் மிகவும் கடைசியான அளவு. அதற்கும் கீழ்போனால், பிராணியானது மெலிந்து, வலு வற்றுப் போகும். இரண்டாவது நோக்கமாவது, பால் உற்பத்திக்கும், தேக உழைப்பு சக்திக்கும் ஏற்பட்டது. கரவை பசுவுக்கு பொதுவாக ஆரோக்கிய ஆகாரம் தவிர, இதர ஆகாரம் கொடுக்காமல் போனால், அது தன் தேக கொழுப்பை அதற்கு பிரயோகித்து, வரவர மெலிவடைந்து, கடைசியில் இறந்து போகும். ஆதலால் ஆகார முக்கியத்தை கீழே விவரித்திருக்கிறது.

1. எல்லா அவயவங்கள், தசை நரம்புகள், எலும்புகள், சதைகள், கொளம்பு கொம்பு மற்றவைகள் சரியாக ஏற்பட்டு வளரவும்.

2. கர்ப்ப உருப்புகள் வளரவும்;

3. உழைப்பினால் தேய்ந்துபோன சதைகளை சீர்படுத்தவும்.

4. தேகத்தில் கொழுப்பு உண்டாவதற்கும்.

5. தேக உழைப்புக்குத் தேவையான உஷ்ணமும், சுறுசுறுப்பும் உண்டாவதற்கும்.

6. பால் எடுப்பதற்கும்.

ஆகார விகிதமானது, வைக்கோல், பசம்புல் இன்னும் மற்ற தீனிகள். அவைகள் மலிவாகக் கிடைக்கின்றன. தவிர வயறு நிரம்ப தின்பதற்கு தகுந்தவை. ஆனால் இவைகள் மாத்திரம் போதாது. சத்து சேர்ந்த ஆகாரமும் இவைகளுடன் கொடுக்க வேண்டும். கால் நடைகளை சிக்கனமாகவும், சரியாகவும் போஷிக்க, ஜந்துவுக்கு தேவையான வைக்கோல் வகை ஆகாரத்தையும், சத்து சேர்ந்த ஆகாரத்தையும் பக்குவமாக கலந்து கொடுக்கவேண்டும். சரியான ஆகார விகிதமானது பிராணியின் ஜாதி, இனம், வயது, தேக ஸ்திதி, உழைப்பு, முதலியவைகளை பொறுத்திருக்கிறது. கீழே பல வகை பிராணிகளுக்குத் தேவையான ஆகார ஜாப்தா குறிக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய பொதுவாக அவைகளை அனுசரிக்கலாம்.

## பிராணிகளின் சாதாரண ஆகாரம்.

எருதுகள்: சாதாரண எருதுகளுக்கு நம் மாகாணத்தில், சராசரி தினம் 15, 20 பவுண்டு வைக்கோல் வகையும் (வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும்), தேக

வளர்ச்சிக்கு 2 பவுண்டு சத்து சேர்ந்த ஆகாரமும் தேவை. வேலை செய்தால் சத்து ஆகாரத்தை இரட்டிக்கலாம். சத்து ஆகாரத்தில் பல தினுசுகள் சேர்த்தால் நல்லது. ஏனென்றால் பல ரசங்களை கலப்பதினால் பிராணி நன்மை அடையும்.

| | உழைப்பில்லாதவைகளுக்கு | — | உழைப்புள்ளவை |
|---|---|---|---|
| கடலை புண்ணாக்கு | 1 பவுண்டு | — | 2 பவுண்டு |
| பருத்திக்கொட்டை | 1 ,, | — | 2 ,, |
| வைக்கோல் | 15 இருந்து 20 பவுண்டுகள் | — | 15 இருந்து 20 பவுண்டுகள் |

### பசுக்களின் வளர்ப்பு

| | |
|---|---|
| கடலை புண்ணாக்கு | 1 பவுண்டு |
| பருத்திக்கொட்டை | ½ ,, |
| துவரம் பொட்டு | ½ ,, |
| நெல் உமி | 1 ,, |
| உப்பு | 2 அவுன்சுகள் |
| உலோக சம்பந்தமான வகைகள் | 2 ,, |
| சோளத்தட்டாவது அல்லது பச்சைப் புல் | 15 பவுண்டு அல்லது 30 பவுண்டுகள் |

### பால் கொடுக்கும் பசுக்கள்.

கறவை பசுக்களுக்கு மேற்சொன்ன சாதாரண உணவுடன் அவைகள் கொடுக்கும் ஒவ்வொரு முக்கால் படி பாலுக்கும் 1 பவுண்டு சத்து சேர்ந்த உணவு கொடுக்க வேண்டும். அவைகள் பல தினுசுகள் சமமாக கலந்த சத்து சேர்க்கைகளாக இருக்கலாம்.

கர்பமாயிருக்கும் பசுக்கள் : (கன்று போட சுமார் 1½ மாதத்திற்கு முன்)

| | |
|---|---|
| கடலை புண்ணாக்கு | 1 பவுண்டு |
| பருத்திக்கொட்டை | 1 ,, |
| கோதுமை தவுடு | 1 ,, |
| துவரம் பொட்டு | 1 ,, |
| உப்பு | 2 அவுன்ஸ் |
| உலோக சம்பந்தமான வகைகள் | 2 ,, |
| பச்சைபுல் | *30 பவுண்டு அல்லது |
| வைக்கோல் | அதில் பாதி. |

*கன்று போட்டபின், கொடுக்கும் பாலுக்குத் தகுந்தாற்போல் இவைகளை அதிகப்படுத்தலாம்.

### கன்றுக்குட்டி.

(வயது 2—6 மாதம்.) தினம் இரண்டு தடவை 4 இருந்து 6 அவுன்ஸ் ராகி கஞ்சியை 1 அவுன்ஸ் உப்பும், ½ அவுன்ஸ் உலோக வகைகளும் கலந்து கொடுக்கலாம்.

| | | |
|---|---|---|
| 6 மாதத்தில்— | கடலை புண்ணாக்கு | 1 பவுண்டு |
| | பருத்திக்கொட்டை | ½ ,, |
| | கோதுமை தவுடு | ½ ,, |
| | உப்பு | 1 அவுன்ஸ் |
| | உலோக வகைகள் | 1 ,, |
| | பச்சை புல் | 5—10 பவுண்டுகள் |

| | கடலை புண்ணாக்கு | பருத்திக் கொட்டை | நெல் உமி | துவரம் பொட்டு |
|---|---|---|---|---|
| 1 வயது கன்று | 1 பவுண்டு | 1 பவுண்டு | ¾ பவுண்டு | ¾ பவுண்டு |
| 2, 3 வயது | 1 ,, | 1 ,, | 1 ,, | 1 ,, |

| | உலோக வகைகள் | உப்பு | பச்சை புல் |
|---|---|---|---|
| 1 வயது கன்று | 1 அவுன்ஸ் | 1 அவுன்ஸ் | 20 பவுண்டு |
| 2, 3 வயது கன்று | 2 ,, | 2 ,, | வைக்கோல் 20, 30 பவு. |

நல்ல மேய்ப்பு கிடைத்தால், மேற்படி தினுசுகளை குறைக்கலாம். மணி பிரகாரம் ஆகாரம் கொடுக்க வேண்டும். அவைகளை கலந்து, பாதி காலையிலும், பாதி சாயந்திரமும் கொடுக்கலாம். நிறைய குடிக்கும் தண்ணீர் கொடுக்கவேண்டும். சரியாக போஷித்தால் கடாரிக் கன்று சீக்கிரமாக வளரும். கன்றை முறையாகவும், நல்ல கன்றாகவும், போடும். பால் விருத்தியும் தேக வளர்ச்சியும் அதிகமாகும்.

### கால் நடைகளுக்கு உலோக சம்பந்தமான ஆகாரத்தின் அவசியம்.

பிராணிகளின் ஆகாரத்தில் உலோக சம்பந்தமானவைகளை கவனிப்பது முக்கியம். அது அவை ஆகார தினுசில் கிடைக்கிறது. கால்ஷியம், (Calcium) பாஸ்பரஸ் (Phosphorus) தான் மிகவும் தேவை. வளரும் சிறு பிராணிகளுக்கு இது முக்கியம். தேகத்தில் அமைந்திருக்கும் கால்ஷியம், பாஸ்பரஸானது சுமார் 2 : 1 என்ற அளவிலுள்ளது. இது குறைந்தால் பல நோய்கள் உண்டாகும். அதற்கு உலோக சம்பந்தமான தயார் செய்யப்பட்ட ஆகார தினுசுகள் வாங்கி கொடுக்க வேண்டும். அல்லது 3 பாகம் சுண்ணாம்பு தூளை 2 பாகம் ஆவியில் வைத்த எலும்பு ஆகாரத்துடன் கலந்து கொடுக்கலாம். இவை கடைகளிலும் கிடைக்கின்றன. சோடியம், (Sodium) க்ளோரைன், (Chlorine) என்பவையும் முக்கியம். உப்பையும் சேர்க்கலாம். அது அதிக நன்மை செய்யும். மற்ற உலோக சம்பந்தமான சத்துகளும் விடாமீனுகளும் அவ்வளவு முக்கியமில்லை. அவை அநேகமாக ஆகாரத்தில் கிடைக்கின்றன.

---

# நெல் பயிர் எருவும் பயிர் செய்யும் முறையும் பற்றிய சிறிய குறிப்பு.

---

சென்னை மாகாணத்தில் 1920 வருஷம் இருந்த 4.23, கோடி ஜனத்தொகை 1940ம் வருஷம் 4.84 கோடியாக அதிகரித்திருக்கிறது. ஆனால் அதே சமயம் உணவு பொருள்கள் பயிர் செய்யப்பட்ட (நெல் பயிர் உள்பட) நில விஸ்தீரணம் 2.833 கோடி ஏகராவிலிருந்து 2.734 கோடியாக குறைந்து விட்டது. 1920இல் நெல் 1.089 ஏகராக்களில் பயிர் செய்யப்பட்டது. 1939-40இல் அது 9.88 லக்ஷம் ஏகராக்களாகிவிட்டது. 1940-41இல் நெல் பயிர் விஸ்தீரணம் 1.046 கோடி ஏகராக்களாக அதிகமாயிற்று. காரணம் சண்டையினால் அரிசி விலை ஏறினதுதான். எனினும், நமது நாட்டுக்கு வேண்டுமான நெல் பயிர் உள்பட உணவு பயிர் நிலங்களின் விஸ்தீரணம் குறைந்திருக்கிறது. குறைவுபட்ட அரிசியானது, கொஞ்சம் விளைச்சல் அதிகரித்ததாலும், முக்கியமாக பர்மா, சயாம், ஹோச்சின்சைனா, இவ்விடங்களிலிருந்து வந்த இறக்குமதியாலும், சரிப்படுத்தப்

பட்டது. ஆனால் இவை இப்போது யுத்த காரணத்தால் மிகவும் குறைந்து போய் விட்டன. இன்னும் குறையப்போகிறது. ஆகையால் உணவு பொருள்களின் பஞ்சத்தை தடுக்க ஒவ்வொரு விவசாயியும் அதிக விளைச்சல் கிடைக்கும்படி முயற்சி செய்வது கடமை.

2. நெல் பயிர் விளைச்சலை இரண்டு வகையில் விருத்தி செய்யலாம். அவை, பாய்ச்சல் விஸ்தீரணத்தை அதிகப்படுத்துவதும்; ஒரு ஏகராவில் கிடைக்கும் சாகுபடியை மேன்மையான பயிர் செய்யும் முறைகளாலும், நல்ல விதைகளை விதைப்பதாலும் அதிகப்படுத்தவா, பூமியின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்த வழியில்லை. விளைச்சல் விருத்தியை நல்ல தினுசுகளை பயிர் செய்வதாலும், நல்ல நாற்றுகளை வளர்ப்பதாலும், சரியான தூரத்தில் நாற்றுகளை நடுவதாலும், நல்ல எருவுகளை உபயோகிப்பதாலும் செய்யலாம்.

## நல்ல தினுசுகள்.

3. விவசாய இலாகாவிடம் கிடைக்கும் பயிர் தினுசுகள் உள்ளூர் வகைகளை விட அதிக விளைச்சல் கொடுக்கிறது என்பது எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆனால், பெருவாரியாக விதைகளை பரவச்செய்ய தகுந்த ஏற்பாடு செய்ய முடியாமையால், அவர்களால் எல்லா தினுசு நெல் பயிராகும் நிலங்களில் 100-க்கு 25 விகிதத்திற்கு அதிகமாக பரவி கொடுக்க சாத்தியப்படவில்லை. விவசாயிகள் கொஞ்சம் விசாரித்தால், 95 சதவிகிதம் சுத்தமுள்ள மேன்மையான விதைகள் எப்போதும் விவசாய இலாகாவிலும், குடிகளிடமும் இருப்பதும், அவைகள் சுலபமாகக் கிடைப்பதும் தெரியவரும். இந்த மேன்மையான தினுசுகள், உள்ளூர் தினுசுகளைவிட 5 முதல் 15 சதவிகிதம் அதிகம் கொடுக்கின்றன. அந்த மாதிரி சராசரி நெல் பயிர் விளைச்சலை 10 சதவிகிதம் உயர்த்தலாம். மற்றொரு விசேஷமென்னவென்றால், இந்த தினுசுகள் நல்ல சாகுபடி செய்வதாலும், எரு போடுவதாலும் அதிக பலனைத்தருகின்றன.

## செழிப்பான நாற்றுகளை வளர்த்தல்.

4. ஒரு ஏகராவுக்கு 100 பவுண்டுக்கு மேல் விதைப்பது கணக்கு நாற்றுக் கால்களில் சாதாரணமாக விதைகள் அடர்த்தியாக விதைக்கப்படுகின்றன. மெலிந்த, பலஹீனமான நாற்றுகள் ஒரு குழிக்கு 10, 15 ஆக கொத்தாக நடப்படுகின்றன. இந்த முறையானது அதிக விதை நஷ்டத்துடன், விளைச்சலையும் குறைவு படுத்துகிறது. நல்ல பயிர் செய்வதற்கு விதை அளவு ஒரு ஏகராவுக்கு 25 முதல் 40 பவுண்டுக்கு மேல் வேண்டியதில்லை. சரியாக கவனிக்கப்பட்ட 8, 10, சென்டு நாற்றுக்காலில் உண்டான 20, 25 பவுண்டு விதை அளவு போட்ட நாற்றுகள் செழிப்பாகவும், மேன்மையாகவும் இருக்கின்றன. ஒரு ஏகராவில் பிடுங்கி நடலாம். அநேக விவசாயிகள் இப்போது விதை அளவை குறைத்திருக்கிறார்கள். ஆனாலும் இன்னும் அநேக இடங்களில் பழையபடி நடக்கிறது.

நெல் பயிரில் நாற்று பிடுங்கி நடுவதில் எவ்வளவு தூரத்தில் நடப்படுகிறது என்பது சாகுபடியைக்கோல் விளைச்சலை பாதிக்கிறது. காலம், நெல் தினுசு, பூமியின் தன்மை, எருவுகளின் அளவு இவைகளை அனுசரித்து 4 முதல் 10-அங்குலம் வரையில் தூரம் இருக்கலாம். முக்கியமானது என்னவென்றால் பயிர் நன்றாக வளர்ந்தபோது பூமியை பரவியிருக்கும்படி அடர்த்தியாக இருக்க வேண்டும். செழிப்பற்ற பூமிகளில், நாற்று அடர்த்தியாக கிளம்பாததால். 4 அங்குல

தூரத்திற்கு தூரம் நடவேண்டும். செழிப்பு பூமிகளில் 10-அங்குல தூரத்திற்கு நடலாம். மேலும், பயிர் பார்வைக்கு செழிப்பாயும் நல்ல கதிர்களோடும் தென் பட்டாலும் தூர நடுவதால் விளைச்சல் அதிகப்படுவதில்லை. சொரத்தத்தில் கிட்ட தூரத்தில் நடுவதுதான் நல்லது. இந்த பிரதேச வழக்கப்படி ஒரு குழியில் கொத்தாக 10, 15 நாற்றுகள் நடுவது லாபகரமில்லை. விதை நஷ்டத்துடன் விளைவும் குறைவு படுகிறது. தூரத்தில் நடுவதானால் ஒரு நாற்றுக்கு பதில் ஒரு குழிக்கு செழிப்பான 2, 4 நாற்றுகளை நடுவது நல்லது.

சாதாரண நெல் பயிரானது ஒரு ஏகரா பூமியிலிருந்து 48 பவுண்டு நைட் ரோஜனும் (Nitrogen), 23 பவுண்டு பாஸ்பரிக் வாயுவும் (Phosphoric Acid) 43 பவுண்டு பொடாஷ் (Potash) ஐயும் அப்புறப் படுத்துகிறது. இது காரணம் பற்றி ஒவ்வொரு நெல் பயிருக்குப் பின்னிட்டு இந்த இழந்த சத்துக்கள் பூமிக்கு திரும்பி யளிக்கப்படாவிட்டால், பூமியானது செழிப்பற்றுத்தான் போகும். ஆனால் நம் மாகாணத்து நெல் பயிர் நிலங்களில் அநேக நூற்றாண்டுகளுக்குத் தேவையான பொடாஷ் இருக்கிறது.

அது போடுவது தேவையில்லை. பாஸ்பரிக் வாயுவும் இருக்கிறது. ஆனால் அவ்வளவில்லை. ஆகையால் அதற்காக ஒரு ஏகராவுக்கு ஒரு ஹன்ட்ரட் வெயிட் (Hundred weight) அளவு சூபர்பாஸ்பேட் (Superphosphate) அல்லது எலும்பு சத்து போடுவது அவசியம். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை, நடும் சமயத்தில் போட்டால், தழை எருவுகள், கால் நடை எருவுகள், புண்ணாக்கு, மீன் எருவு— இவைகளைவிட அதிக பலனைத் தருகின்றது. நைட்ரோஜன் (Nitrogen) என்பது ரொம்பவும் பயனளிப்பது. ஆனால் பூமியில் இருப்பது மிகவும் கொஞ்சம். அதற்கு பதில் மேற்சொன்ன தழை எருவு முதலியவைகளையும், ரஸாயன தயாரிப்பு எருவு களையும்—அம்மோனியம் சல்பேட், என்பது (Ammonium Sulphate) போல், உபயோகிக்கலாம். ஆனால் மேற்சொன்ன தழை எருவுகள், ரஸாயன எருவுகள் இரண்டையும் உபயோகித்தால் கிடைக்கும் பலன், ஒன்று மாத்திரம் உபயோகித் தால் கிடைப்பதில்லை. தழை முதலிய எருவானது, முக்கியமாக பச்சிலை எருவுகள் —நிலத்தின் இருக்கத்தை மேன்மை படுத்தி, வேர் ஊன்றுவதற்கு அனுகூலப் படுத்துகிறது. ஆகையால் பச்சிலை மூலமாக நைட்ரோஜன் எருவை கொஞ்சமும், பாக்கி புண்ணாக்கு மாதிரி சத்து சேர்ந்த எருவும் இரண்டு தடவையாக, அ—து— ஒன்று நடும் சமயத்திலும், மற்றொன்று களை பிடுங்கும்போதாவது, அல்லது, பூப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாவது.—உபயோகித்தால் நல்ல சாகுபடி கிடைக்கும். 48 பவுண்டு நைட்ரோஜன் கிடைக்க, 4000 பவுண்டு பச்சிலை தழை எருவும், 600 பவு கடலை புண்ணாக்கும் அல்லது 900 பவு மீன் எருவும், அல்லது 2 ஹன்டரட் வெயிட் (Hundred weight) அம்மோனியம் சல்பேட்டும் போட வேண்டும். இவைகளில் மிகவும் மலிவானது பச்சிலை தழை எருவு—அடுத்தபடி புண்ணாக்கு. மிகவும் விலையுள்ளது அம்மோனியம் சல்பேட். அதை தனியாக உபயோகிப்பதைவிட பச்சிலை தழையுடனாவது, புண்ணாக்குடனாவது கலந்து உப யோகிப்பது சிக்கனமான முறை.

பட்டாம்பி விவசாய ஆராய்ச்சி பண்ணையில், நடுவதற்குமுன் உபயோகித்த பச்சிலை தழை, புண்ணாக்கு எருவுகளின் ஆராய்ச்சிகளுக்கும், நட்டு ஒரு மாதத்திற்குப் பின் உபயோகித்த அம்மோனியம் சல்பேட்டுக்கும், மூன்று போகம் இரண்டு போகம் சீசன்களின் பரீக்ஷிக்கப்பட்ட விவரம் வருமாறு.

## (தென் மலையாளம்) பட்டாம்பி எருவு ஆராய்ச்சி.

| எருவு விதம். | தினுசு. | அளவு. | விளைவு 1 ஏக்ரா. | சத விகிதம் அதிகப்படி. |
|---|---|---|---|---|
| எருவு தனியாக போடப்பட்டது ... | 1. வேப்ப புண்ணாக்கு. | 600 | 1,738 | 19 |
| | 2. ஆமணக்கு புண்ணாக்கு. | 500 | 1,843 | 26 |
| | 3. பச்சிலை தழை | 4000 | 1,873 | 28 |
| | 4. கடலை புண்ணாக்கு. | 400 | 1,876 | 28 |
| | 5. அம்மோனியம் சல்பேட். | 80 | 1,872 | 28 |
| எருவு போடாதது. | — | — | 1,461 | — |
| ஆர்கானிக் எருவுகளும், உலோக சம்பந்தமான எருவுகளும் கலந்தவை. | 1. வேப்ப புண்ணாக்கு. | 600 | — | — |
| | அம்மோனியம் சல்பேட். | 80-பவு. | 2,363 | 55 |
| | 2. ஆமணக்கு புண்ணாக்கு. | 500 | — | — |
| | அம்மோனியம் சல்பேட். | 80-பவு. | 2,324 | 59 |
| | 3. பச்சிலை தழை. | 4000-பவு. | — | — |
| | அம்மோனியம் சல்பேட். | 80-பவு. | 2,324 | 60 |
| | 4. கடலை புண்ணாக்கு. | 4000 | — | — |
| | அம்மோனியம் சல்பேட். | 80 | 2,384 | 63 |

மேலே கொடுத்த விவரத்திலிருந்து, பச்சிலை தழையாவது புண்ணாக்காவது அம்மோனியம் சல்பேட்டுடன் கலந்து உபயோகித்ததில் விளைவு மிகவும் அதிகமாகி இருப்பது தெளிவாகத் தெரிகிறது. கடலை புண்ணாக்கும், ஆமணக்கு புண்ணாக்கும் பச்சிலைதழை எருவைப் போலவே பயன் தருகின்றன. பச்சிலை கிடைக்காத இடங்களில் புண்ணாக்குகளை நெல் பயிருக்கு தாராளமாக உபயோகிக்கலாம்.

மாகாணத்தின் எல்லா விடங்களிலும் பச்சிலையும், புண்ணாக்கும் நெல் விளைச்சல் அதிகத்தை தூண்டிப்பாக உண்டுபண்ணின. முடிந்தவரையில் ஒவ்வொருவரும் தங்கள் நிலத்தில் பச்சிலை எருவு பயிர்களை, பயிர் செய்யவேண்டும்.

# சென்னை மாகாணத்தின் ஆகார பயிர்கள் உற்பத்தியில் ஏற்றம்.

---

சென்னை மாகாணத்தில் $2\frac{3}{4}$ கோடி ஏகராக்களுக்கு குறைவில்லாமல், அதாவது மொத்த விஸ்தீரணத்தில் $\frac{3}{4}$ பாகம், ஆகார பயிர்கள் செய்யப்படுகின்றன. இதில் ஒருகோடி ஏகராக்களுக்கு மேல், அதாவது சாகுபடி செய்யப்படும் விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பங்கு, நெல் பயிர். மற்ற பாகங்களில் இதர ஆகார பயிர்கள்; அதாவது, ஜோன்னு, சஜ்ஜா, சோன்னு, கம்பு, அரிகா, சாமா, துவரை, பயறு கொள்ளு, உளுந்து முதலியன. ஆயினும், நாம் பர்மாவிலிருந்தும், இதர மாகாணங்களிலிருந்தும் 7 லக்ஷம் டன்கள் அரிசியும், மற்ற மாகாணங்களிலிருந்து பருப்பு வகைகளும் வாங்குகிறோம். சென்னை, சிலோனுக்கும் மற்ற இடங்களுக்கும் சுமார் 3 லக்ஷ டன் அரிசி அனுப்புகிறது. ஆகவே அரிசி ஏற்றுமதி முழுவதையும் நிறுத்தினாலும் கூட, நமக்கு மற்ற இடங்களிலிருந்து 4 லக்ஷ டன் அரிசி தேவையாக இருக்கிறது. கொச்சியும், திருவாங்கூரும் கூட சுமார் 4 லக்ஷ டன் அரிசி இறக்குமதி செய்கின்றன. இது நின்றுவிட்டால், சென்னையிலிருந்துதான் அவைகளுக்கு அரிசி கிடைக்கவேண்டும். தென்னிந்தியா முழுதும் கணக்குப் பார்த்தால் நமக்கு 8 லக்ஷ டன்கள் குறைவுபடுகின்றன. மற்ற தான்யங்கள் மற்ற தேசங்களிலிருந்து கிடைப்பதில்லை. இப்போது யுத்த காரணமாக பர்மா அரிசி இறக்குமதி மிகவும் தடைப்பட்டிருக்கிறது. கிழக்குக் கோடியிலும் சண்டை பரவினால், அது முற்றிலும் தடைப்படக்கூடும். ஆகையால், சென்னையில் அரிசி, மற்ற தான்யங்கள் விஷயங்களில் மற்ற தேசங்களை எதிர்ப்பார்க்காமல் இருக்க வேண்டியது மிக அவசியம். இல்லாவிட்டால் அதிக கஷ்டம் ஏற்படும்.

ஆகார பயிர்களை அதிகப்படுத்த இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று பயிர் நிலங்களின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தல்; மற்றொன்று, ஒரே ஏகராவில் தற்போதைவிட அதிகமாக விளையும்படி செய்தல்.

விஸ்தீரணத்தை அதிகப்படுத்தும் விஷயமாய் லாபத்துடன் பயிர் செய்யக்கூடிய எல்லா நிலங்களும், இப்போது பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

அதிகப்படி விளையும்படியாக பயிர் செய்வதுதான் இப்போது உள்ள மற்ற வழி.

சாகுபடி செய்யும் விதமும் விளைச்சலை அதிகப்படுத்த காரணமாகிறது. தற்சமயம் உபயோகப்படுத்தப்படும் மர கலப்பைகளால், 5 இருந்து 7 தடவைகள் உழுதால் தான், புது மாதிரியான இரும்பு கலப்பைகளால் சிறிது உழுதாலும் ஏற்படும் பலன்கள் கிடைக்கின்றன. அதுவும் சில சமயங்களில் திருப்தியாகவில்லை. ஒவ்வொரு தாலூகா விவசாய டிபோக்களிலும் இந்த இரும்பு கலப்பைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் ரூபாய் 6 முதல் 10க்கு மேல் விலை இல்லை. வாங்க விரும்புகிறவர்களுக்கு கையில் ரொக்க பணம் இல்லாவிட்டால், டக்காவி கடன் மூலம் அவைகளை பெறலாம். விவசாய டிமான்ஸ்ட்ரேடர் (Demonstrator) இதற்கு ஏற்பாடு செய்வார். கலப்பைகளின் விலையை ஒன்று அல்லது இரண்டு தடவைகளாக நிலத்தீர்வை பணத்துடன் செலுத்திவிடலாம்.

நீர்ப்பாய்ச்சலுள்ள, நிலங்கள் ஆகார பயிர்கள் விசேஷமாக நெல் பயிர், செய்ய ஏற்றவை. ஒரு ஏகராவின் சராசரி விளைவு சுமார் 1,200 பவுண்டுகளாக கணக்கிடப்பட்டிருக்கிறது. மற்ற தேசங்களின் நெல் விளைவோடு இதை ஒப்பிட்டுப்பார்த்தால், இது கண்டிப்பாக குறைவுதான்.

விவசாய இலாகா, மாகாணம் முழுவதும் உபயோகமாகும்படி அந்த அந்த இடங்களின் பூமிக்கு ஏற்றதான 70 தேர்ச்சியான நெல் ரகங்கள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அவை உள்ளூர் நெல்லைவிட 100 க்கு 8 முதல் 15 விகிதம் அதிகப்படி விளைகின்றன. மேன்மையாகவும் இருக்கின்றன. அந்த விதைகள் எல்லா விவசாயியும் அடையும் சக்திக்குள்ளதாக இருக்கின்றன. எல்லா விவசாயிகளும் மட்டமான உள்ளூர் நெல் ரகங்களை விட்டு விட்டு, இந்த மேன்மையான நெல்லை உபயோகித்தால், மாகாண முழுதும் விளைச்சலை 100 க்கு 8 விகிதம் அதிகப்படுத்தலாம். எப்படியிருந்தாலும் 5 விகிதத்திற்கு குறைவுபடாது. நல்ல விதைகள் கொஞ்சமாக விவசாய இலாகாவில் எப்போதும் கிடைக்கிறது.

இப்போது அந்த இலாகாவில் அதிகப்படியான விதைகள் உற்பத்தியாக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு தேவையான எல்லாவற்றையும் இல்லாவிடினும், அனேகமாக எல்லாவற்றையும் கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது.

விவசாயிகள் அதிக விதைகளை வீண் செய்கிறார்கள். இப்போதுபோல் ஒரு ஏகராவுக்கு 50 பவுண்டு முதல் 100 பவுண்டு வரையில் விதை போடுவதற்கு பதிலாக விவசாய இலாகா சொல்லுகிறபடி 20 பவுண்டு போட்டால், அனேக டன் விதைகள் மிச்சப்படுவதுடன் விளைவும் தகுந்த எருவுகள் சேர்த்து, அதிகப்படும்.

விளைவை அதிகப்படுத்த தகுந்த எருவுகள் உபயோகப்படுத்தவேண்டும். ஒரு சரியான பயிர் பூமியிலிருந்து 48 பவுண்டு நைட்ரோஜனும் (Nitrogen), 23 பவுண்டு பாஸ்போரிக் வாயுவும் (Phosphoric Acid) 41 பவுண்டு பொடாஷ் (Potash) ம் அப்புறப்படுத்துகிறது. நம் பூமிகளில் பொடாஷ் (Potash) எனப்படுவது அதிகம். அந்த எருவுகள் தேவையில்லை. ஆனால் பாஸ்போரிக் வாயும், நைட்ரோஜனும் (Phosphoric Acid and Nitrogen) போறாது. அந்த எருவுகள் தாராளமாய் எந்த விதமாகவாவது உபயோகப்படுத்தினால் தான் பயிர் செழித்து வளரும்.

நம் நிலங்களுக்கு எருவு நீனி சரியானபடி இல்லாததால், செழிப்பற்று இருக்கின்றன. இந்த குறையை தீர்க்கவேண்டும். அனேக விவசாயிகளுக்கு நெல் பயிர் நிலங்களுக்கு எருவு போடுவது முடியாத காரியம் என்ற அபிப்ராயம் இருக்கிறது. விவசாய இலாகா சொல்லுகிறபடி செய்வதும் இயலாது என்ற எண்ணம். இது தப்பு. விவசாய இலாகா ஒரு நாளும் விவசாயிகளுக்கு சாத்தியப்படாத வழியை சொல்லமாட்டார்கள்.

மேற் சொன்ன இரண்டு எருக்களில் அ. து. நைட்ரோஜன், பாஸ்போரிக் வாயு (Nitrogen & Phosphoric Acid), நைட்ரோஜன் தான் மிக முக்கியம். அது தான் பயிரை வளர உதவுகிறது. அதை அனேக விதமாக பூமியில் உபயோகிக்கலாம், அ. து. கால் நடைகளின் எருவு, பச்சிலை தழைகள், புண்ணாக்கு, நைட்ரோஜன் கொண்ட செழிக்கச் செய்யும் வகைகள், (Nitrogen Fertilisers), அதாவது, அம்மோனியம் சல்பேட் (Ammonium Sulphate) கால்ஷியம் சியனமைட் (Calcium Cyanamide), சோடியம் நைட்ரேட் (Sodium Nitrate) முதலியன.

பச்சை தழை எருவுகள் தான் நெல் பயிர் நிலங்களுக்கு உபயோகப் படுத்தக்கூடிய மிகவும் மலிவான நைட்ரோஜன் (Nitrogen) ரூபமான எருவு. விலை மிகவும் குறைந்தது. ஒரு ஏகரா நிலத்தில் உண்டாகும் பச்சை தழை எருவுகள் சாதாரணமாக 2, 3 ஏகராக்களுக்கு காணும். ஒரு ஏகராவுக்கு தேவையான அளவு, ஏகராவுக்கு 2 இருந்து 4 ரூபாயிக்கு மேல் ஆகாது.

---

# புகையிலை பயிருக்கு ஆபத்து.

---

'போடு' என்று தெலுங்கில் வழங்கப்படும் ஒருவித துடைப்பத்தைச் சேர்ந்த புஷ்பச் செடி புகையிலை, கத்தரி, தக்காளிச் செடிகளை நாசப்படுத்துகிறது. சமீப வருஷங்களாக, குண்டூர், கிருஷ்ணா ஜில்லாக்களில் புகையிலை தொழிலை மிகவும் அபாயமாக பாதிக்கிறது. சமீபத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து, அது கோதாவரி ஜில்லாவிலும் பரவி வருவதாகத் தெரிகிறது. குண்டூர் ஜில்லாவில் மாத்திரம் இதனால் புகையிலை பயிர் செய்பவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் 1940 வருஷத்தில் சுமார் 35 லக்ஷம் ரூபாய். ஆகையால் புகையிலை பயிர் செய்பவர்கள் இதை தவிர்க்க உடனே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

'போடு' என்பது புகையிலை செடியின் வேர்களில் கிளம்புகிறது. பூமியிலிருந்து அதனால் ஆகாரத்தை ஏற்றுக்கொள்ள சக்தி யில்லாததால், அது புகையிலை செடியின் ஆகாரம், தண்ணீர் இவைகளை ரொம்பவும் அபகரிக்கிறது. இவைகளால் பீடிக்கப்பட்ட செடிகள் செழிப்பில்லாமல், பலமற்று குன்றிப்போய் விடுகின்றன. வளர்ச்சல் கொஞ்சம் தான் சேருகிறது. மேலும் பதம் செய்த இலையின் தரம் மட்டமாகிவிடுகிறது. ஒரு வயலில் அது அதிகம் பரவியிருந்தால், வளர்ந்த பயிரை எடுப்பதும் லாபமற்றுப் போகிறது. ஆகையால் புகையிலை பயிர் செய்யும் ஒவ்வொருவரும் அந்தச் செடியை தெரிந்துகொண்டு அது கிளம்பியவுடன் அதை வேருடன் பிடுங்கி எல்லாவற்றையும் கொளுத்திவிட வேண்டும். அல்லது ஒரு ஆழமான பள்ளத்தில் போட்டு மூடிவிட வேண்டும். அது வயலுக்கு வயல் சீக்கிரமாக பரவும்.

விவசாய இலாகாவில இனமாக கிடைக்கும் 95-ம் செ. பிரசுரத்தில் இதன் விவரமும், தடுக்கும் முறை எல்லாம் சொல்லி யிருக்கிறது. அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது. அந்தச் செடியின் விதை ஆடு மாடுகளின் ஆகாரத்துடன் உள் சென்று அவைகளின் எருவுகளை பாழாக்குகின்றன. வடக்கே சர்க்கார் ஜில்லாக்களில் எல்லா புகையிலை செய்பவர்களையும் ஷை செடியை கவனித்து, சேகரித்து ஆழமான பள்ளத்தில் போட்டு மூடும்படி நிர்பந்தித்து, கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். இது மிகவும் சுலபமான வழி. வீட்டிலுள்ள ஆண் பெண் குழந்தைகள் எல்லாரும் செய்யலாம். இந்த சுலப வழியை செய்யத் தவறுபவர்களுக்கு 50 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

---

# கிராமங்களில் விமான தாக்குதல் பாதுகாப்புபற்றி சிறு குறிப்பு.

---

சமாதானத்தில் கிராமங்களில் விமானத் தாக்குதலாவது குண்டு வீச்சாவது ஏற்படும் என்ற பயம் மிகக் குறைவு. என்றாலும் அக்கம் பக்கங்களில் அகஸ்மாத்தாக விழும் குண்டுகளைப்பற்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள அவைகள் தயாராக இருக்கவேண்டும்.

## ஜனங்களின் பாதுகாப்பு.

எதிரி விமானம் சமீபிக்கிறது என்று சந்தேகப்படும்படியான சத்தம் கேட்டவுடன் ஜனங்கள் செய்யவேண்டியவைகளாவது :—

(1) வீடுகளில் இருக்கும் ஜனங்கள் ஒரு அறையின் உள்ளே சென்று விடவேண்டும்.

(2) தெருவுகளிலோ, வெளிப்பிரதேசங்களிலோ இருக்கும் ஜனங்கள் சமீபத்தில் இருக்கும் கட்டடத்திற்குள்ளோ, இல்லாவிட்டால் சமீபத்திலிருக்கும் பள்ளத்திற்குள்ளோ, அல்லது வாய்காலுக்குள்ளோ புகுந்துக் கொள்ளவேண்டும்.

(3) ஒன்றும் அகப்படாவிட்டால், அப்படியே குப்புறப் படுத்துக்கொள்ள வேண்டும்.

ஒருபோதும் கும்பலாக சேர்ந்தாவது, அல்லது விமானங்களை பார்த்துக் கொண்டாவது ஜனங்கள் நிற்கக்கூடாது. விமானங்களை பார்க்க உண்டாகும் ஆவலை கண்டிப்பாக தடுக்கவேண்டும்.

தாங்கள் ஒதுங்கி யிருக்கும் இடங்களிலிருந்து, விமானங்களெல்லாம் மறைந்த பின்தான் நகரவேண்டும்.

## சொத்துக்கள் பாதுகாப்பு.

வெடிகுண்டுகளாலும், நெருப்பு குண்டுகளாலும் சொத்துகளுக்கு சேதம் ஏற்படலாம். வெடி குண்டால் ஏற்படும் சேதத்திற்கு, சேதமடைந்து பரவி விழுந்திருக்கும் சாமான்களை அப்புறப்படுத்தி, மறுபடியும் புதிதாக கட்ட வேண்டியதுதான். ஆனால் நெருப்பு குண்டால் ஏற்படும் நெருப்புச் சேதத்தை, நெருப்பை அணைக்க தீவிர முயற்சி சீக்கிரமாக எடுத்து, உண்டாகும் நஷ்டத்தைக் குறைக்கலாம்.

இதற்காக ஒரு சிறிய கிராம கமிடியை நியமிக்கலாம். கிராமங்களிலிருக்கும் சில கிணறுகளை பொறுக்கி, சமயத்திற்கு உதவும்படி தாம்பக்கயறுகள், ராட்டினங்கள், வாளிகள் இவைகள் தயாராக வைக்கவேண்டும். அநேக வாலிபர்களுக்கு நெருப்பு அணைக்கும் முறையை பயிற்சி அளித்து சந்தர்ப்பம் ஏற்படும்போது அவர்களை அந்த வேலைகளை சமாளிக்க தயார் செய்யவேண்டும். தண்ணீர் இழுக்க

இரண்டு பேரும் தண்ணீர் நிரப்பிய வாளிகளை நெருப்பு பிடித்த இடத்திற்கு அனுப்ப வரிசையாக ஆட்கள் நின்றும், காலியான வாளிகளை திரும்ப கிணற்றுக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்யவேண்டும். சாத்தியமானால் ஒவ்வொரு கிராமத்திலும், 1, 2 'ஸ்டிரப்' பம்புகளும், ஒரு தண்ணீர் தெளிக்கும் குழாயும் வாங்கலாம். நெருப்பு அணைப்பு வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் இந்த பம்புகள் உபயோகப் படுத்தும் வழியை கற்றுக்கொள்ளவேண்டும்.

எக்காரணத்தினாலும், நெருப்பு குண்டுகளை கைகளால் தொடக்கூடாது. ஏனென்றால் அவைகளில் சில பலமாக எரித்து சில வெடித்து அதிக காயத்தையாவது மரணத்தையாவது உண்டாக்கவும் செய்கின்றன.

குண்டு ஏதாவது கீழே விழுந்து வெடிக்காமல் போனால் அதன் சமீபத்தில் போகக்கூடாது ஒருவரையும் அருகில் போகவிடக்கூடாது. உடனே சமீபத்திலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் தெரிவிக்கவேண்டும்.

இது தவிர, சொத்துக்கோ மனிதர்களுக்கோ சேதம் நேரிடும் பக்ஷத்தில், எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அந்த விஷயத்தை அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு தெரிவிப்பது உத்தமம்.

(Sd.) டி வி. ராமமூர்த்தி,
விளம்பர உத்தியோகஸ்தர்

# பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு:

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு:

38, காரிணீஸ்வரர் கோயில் தெரு, சைதாப்பேட்டை.

பிரசிடெண்டு:

மிஸ்டர் டி. எ. ராமலிங்கம் செட்டியார், பி.எ., பி.எல்., எம்.எல்.சி.

செக்ரடேரி:

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

செக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.



வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியயன்னு, பி.எ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 117 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. எ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட் மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ, பிரஸிடென்ட்.

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமியம் விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.